**அதுரெலிய பிரதேச சபை - 2022**

**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அதுரெலிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதுரெலிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 272,100 தொகை பெறுமதியான கை டிரக்டர் ஒன்று மற்றும் துவிச்சக்கர வண்டி ஒன்று மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டிக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையால் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ரூபா 200,000 தொகையினால் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டிற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 4,444,155 தொகை பெற வேண்டிய வருமானம் ஒன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முன்னைய ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த 02 நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 138,610 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பின் மூலம் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 10,839,361 தொகைக்கான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 733,304 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 போதிய அதிகாரத்தினால் மேற்கொள்ளப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான மோட்டார் க்ரேடர் இயந்திரம் முறைசாரா விதமாக தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் ரூபா 113,880 இற்கான வாடகை ஒன்று சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது. | எதிர்காலத்தில் தடுத்து வைத்தல் பணத்தில் இருந்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி. 272(1) மற்றும் (2) | சபைக்குச் சொந்தமான நடைமுறைக் கணக்கில் இருந்து செலுத்தப்பட்டிருந்த ரூபா 51,072 பெறுமதியான இரண்டு உறுதிச் சீட்டுக்கள் காணாமல் போதல் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த இரண்டு உறுதிச் சீட்டுக்களையும் விரைவாக தேடி எடுத்து சமர்ப்பிக்கின்றேன் என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) நி.பி. 571 | 02 வருடங்களை மிகைத்த காலவதியான ரூபா 3,318,945 தொகை பெறுமதியான 142 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடாத்தப்படும் நிதிக் குழுவிற்கு சமர்ப்பித்து பரிந்துரை பெற்றுக் கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iii)01/2021 இலக்க மற்றும் 2021 செப்தெம்பர் 29 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 2:3(iv) | தலஹகம மேற்கு சிரமதான விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்த வேலையை நிறைவேற்றுவதற்காக கிராமிய அபிவிருத்தி சங்கம் ஒன்றிற்கு ரூபா 1,468,365 இற்கான உடன்படிக்கை பெறுமதிக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த வேலை மேற்கொள்ளல் ஒப்பந்தக்காரர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 196,720 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 315,020 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 2,262,500 | 1,392,865 | 1,455,502 | 1,671,954 | 1,835,000 | 626,573 | 492,058 | 1,734,591 |
| ii. | வாடகை | 3,854,000 | 5,973,359 | 4,998,780 | 1,385,086 | 3,635,000 | 841,250 | 565,505 | 410,507 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 317,000 | 308,140 | 275,840 | 262,650 | 193,500 | 662,510 | 491,610 | 230,350 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 1,140,000 | 1,342,725 | 1,065,895 | 322,799 | 984,500 | 609,347 | 600,023 | 45,969 |
| | மொத்தம் | 7,573,500 | 9,017,089 | 7,796,017 | 3,642,489 | 6,648,000 | 2,739,680 | 2,149,196 | 2,421,417 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வீதவரி மீதி ரூபா 1,734,591 தொகையாக காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 1,544,012 தொகையாக இருந்தது. | வீதவரி அறவீடு செய்வதற்காக ஒவ்வொரு வாரத்திலும் நிலுவையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியளவில் சபைக்குச் சொந்தமான கடை வாடகை அறவீடு செய்யப்படும் 23 கடையறைகள் காணப்பட்டதுடன் அவற்றில் 07 கடையறைகளில் இருந்து மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 297,898 இற்கான நிலுவை வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக அறியப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 425,869 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,280,425 தொகை காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய தொகையை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரமாகும் உக்கக் கூடிய குப்பைகளை பயன்படுத்தி சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்காகவும் உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்கும் நிரந்தர மற்றும் முறைசார் குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் ஒன்று சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்காததுடன் அதற்குப் பதிலாக நாளாந்தம் சேகரமாகும் உக்கக் கூடிய குப்பைகளை அக்குரஸ்ஸ பிரதேச | மீள்சுழற்சி செய்யக் கூடிய உக்காத பண்டங்களை மாத்தறை மா நகர சபைக்கு வழங்குவதற்கும், மீள்சுழற்சி செய்ய முடியாத பண்டங்களை தரையை நிரப்புவதற்காக தனியார் காணி ஒன்றிற்கு வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றது என. | முறைப் பிரகாரம் குப்பை இடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சபையின் சேதனப் பசளை செயற்களத்திற்கு வழங்குவது உக்காத குப்பைகளை கொடபிட்டிய ரஸீனாவத்த எனும் தனியார் காணி ஒன்றில் இடப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | | |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஜனவரி 24 திகதிய 05/2008(i) இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 திகதிய 05/2008 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தியுள்ளவாறு திருத்திய பிரஜைகள் சாசனம் தயாரிக்கப்பட்டு சபையில் காட்சிப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அதனை தயாரித்து பொது மக்களின் காட்சிக்காக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை நாளதுவரையாக பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகளின் பெறுமதியை மீண்டும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளில் புதிய பெறுமதியை உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான சபையினால் பராமரிக்கப்படுகின்ற அனைத்து பாதைகளையும் உட்படுத்தி பாதை இன்வென்டரி பதிவேடொன்று தயாரித்திருக்கவில்லை. | பாதைகளை இன்வென்ட்ரி மயப்படுத்துதல் கணினி மென்பொருள் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது என. | பாதை இன்வென்ட்ரி பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மின்சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சுச் செயலாளரின் PR/01/01 இலக்கங் கொண்ட 2010 ஆகஸ்ட 17 திகதிய சுற்றறிக்கைக்கு இணங்க வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் மீளாய்வாண்டில் வீதிவிளக்கு பராமரிப்பு அலுவல்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 470,000 இற்கான செலவு மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்காக வீதிவிளக்குகளை பராமரிப்புச் செலவு மீளளிப்புச் செய்யப்படமாட்டாது என மின்சார சபையினால் எழுத்துமூலம் அறிவித்திருந்தது என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலஹகம மேற்கு விளையாட்டுத் திடல் நிர்மாணிக்கும் போது மண் வெட்டுதல் இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு, தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மனித உழைப்பு மூலம் மண் வெட்டுவதற்கான கன மீற்றர் ஒன்றிற்கு MS-034 கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 766.04 ரேட்டினை பயன்படுத்தி இருந்தமையால் ஒப்பந்த வேலைச் சங்கத்திற்கு ரூபா 484,648 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | மிகையா செலுத்தப்பட்டிருந்த தொகையை அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் வேலை வெளிக்கள தொழிலாளர் 05 பேர், சுகாதார தொழிலாளர் ஒருவர் மற்றும் நூலக உதவியாளர ஒருவர் ஆகியோர் பதவிக்குரிய குறிப்பிட்ட கடமைகள் சாட்டுதல் மேற்கொள்ளப்படாமல் கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 2,590,380 இற்கான தொகையொன்று சம்பளம் மற்றும் படிகள் என செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் கடமைகள் சாட்டப்படுதல் மேற்கொள்ளப்படுகின்றது என. | பதவிகளுக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |